**அறிவிக்கை எண்** : 20/2023

**விளம்பர எண்** : 669

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**துறைத்தேர்வுகள் – டிசம்பர் 2023**

**அறிவிக்கை**

**விண்ணப்பதாரர்களிடமிருந்து துறைத்தேர்வுகள் – டிசம்பர் 2023-க்கான விண்ணப்பங்கள் இணையவழி மூலமாக மட்டும் வரவேற்கப்படுகின்றன**

துறைத்தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கும் முன் விண்ணப்பதாரர்களின் விவரங்களை ஒருமுறைப் பதிவு /நிரந்தரப் பதிவில் பதிய வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் ஆதார் எண்ணை கட்டாயமாக துறைத்தேர்வுக்கான ஒருமுறைப் பதிவு /நிரந்தரப் பதிவுடன் இணைக்க வேண்டும். **பெயர், தலைப்பெழுத்து, தகப்பனாரின் பெயர், பிறந்த தேதி, பணிபுரியும் மாவட்டம் போன்றவற்றில் ஏதேனும் மாற்றம் தேவைப்படின், ஒருமுறைப் பதிவு /நிரந்தரப் பதிவில் மாற்றம் செய்தபின் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த பின்னர் தேர்வுக் குறியீட்டெண்/ தேர்வு மையம்/ பெயர்/தந்தை பெயர்/ வயது/ பிறந்த தேதியில் திருத்தம் போன்ற கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எனவே, விண்ணப்பதாரர்கள் மிகுந்த கவனத்துடன் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

விண்ணப்பதாரர்கள் இணையவழி மூலமாக மட்டுமே துறைத்தேர்விற்கு விண்ணப்பிக்க வேண்டும். பிற வகைகளில் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பக் கட்டணம் செலுத்தியிருந்தாலும் அவை நிராகரிக்கப்படும்.

**தேர்வின் பெயர்** : **துறைத்தேர்வுகள் – டிசம்பர் - 2023**
**அறிவிக்கை நாள்** : 27.09.2023
**விண்ணப்பிக்க கடைசி நாள் : 26.10.2023 அன்று 11.59 பிற்பகல்**
**தேர்வு நடைபெறும் தேதிகள்** :

| | |
|---|---|
| கணினி வழியிலான கொள்குறி வகை தேர்வுகள் (40% / 60% / 80% / 100%) | 09.12.2023 முதல் 11.12.2023 வரை மற்றும் 16.12.2023 முதல் 17.12.2023<br>(5 நாட்கள் / 9 அமர்வுகள்) |
| விரிந்துரைக்கும் வகை தேர்வுகள் (20% / 40% / 60% / 100 %) | 12.12.2023 முதல் 15.12.2023 வரை<br>(4 நாட்கள் / 8 அமர்வுகள்) |

| | | |
|---|---|---|
| தேர்வு நடை பெறும் நேரம் | : | காலை 9.30 முதல் நண்பகல் 12.00 வரை மற்றும் பிற்பகல் 2.30 முதல் 5.00 வரை (அந்தந்த தேர்வுகளுக்கேற்றவாறு தேர்வு நேரம் மாறுபடும்) |
| தேர்வு கட்டணம் | : | பதிவு கட்டணமாக ரூ.30/-ம், ஒவ்வொரு தேர்விற்கும் தேர்வு கட்டணம் ரூ.200/-ம் சேர்த்து இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். பிற வகைகளில் செலுத்தப்படும் கட்டணங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது/ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. |

<u>பொதுவான விவரங்கள்:</u>

1. துறைத் தேர்வுகள் டிசம்பர் - 2023-ன் அறிவிக்கைக்கான இணைப்பு II மற்றும் இணைப்பு III-ல் குறிப்பிட்டுள்ளவாறு நடைபெறும். அனைத்து கொள்குறி வகை தேர்வுகள் (100 சதவீதம் மற்றும் பகுதியளவு அதாவது 40 சதவீதம் / 60 சதவீதம் / 80 சதவீதம்) மட்டும் கணினி வழி தேர்வாக நடைபெறும். அனைத்து விரிந்துரைக்கும் வகை தேர்வுகள் (100 சதவீதம் மற்றும் பகுதியளவு அதாவது 20 சதவீதம்/ 40 சதவீதம் / 60 சதவீதம்) ஏற்கெனவே உள்ள, விடைத்தாளில் எழுதும் முறையிலேயே நடைபெறும். அனைத்து கொள்குறிவகை தேர்வுகளும் 5 நாட்களுக்கு 9 அமர்வுகளாக நடைபெறும். அனைத்து விரிந்துரைக்கும் வகை தேர்வுகளும் 4 நாட்களுக்கு 8 அமர்வுகளாக நடைபெறும். எனவே, இணைப்பு-IV-ல் உள்ள அட்டவணைப்படி, துறைத்தேர்வுகள் 9 நாட்களுக்கு நடைபெறும். அனைத்து கொள்குறிவகை தேர்வுகளும் கணினி வழி தேர்வாகவும், அனைத்து விரிந்துரைக்கும் வகை தேர்வுகளும் ஏற்கெனவே உள்ள முறையான எழுதும் முறையிலான தேர்வாகவும் இணைப்பு II-ல் குறிப்பிட்டுள்ளவாறு 'புத்தகத்துடன் கூடிய/புத்தகமின்றிய' தேர்வாக பின்பற்றப்படும். எனவே, ஒருங்கிணைந்த கொள்குறி மற்றும் விரிந்துரைக்கும் வகை தேர்வுகள், தனித்தனியே நடத்தப்படுவதால், விண்ணப்பதாரர்கள் ஒரு தேர்விற்கு இருவேறு தினங்களில் தேர்வெழுத நேரிடும்.
2. **வருவாய் துறையில் பின்வரும் ஒருங்கிணைந்த கொள்குறி வகை மற்றும் விரிந்துரைக்கும் வகையான (Combination Type) 9 தேர்வுகள் (055, 069, 101, 103, 113, 115, 136, 144 & 172 ) முழுவதும் விரிந்துரைக்கும் வகை (Descriptive Type) தேர்வுகளாக மாற்றப்பட்டுள்ளது. மேலும், டாஸ்மாக் ஊழியர்களுக்கு அடுத்த நிலை பதவி உயர்வு அளிக்க முழுவதும் கொள்குறி வகையான (100% Fully Objective) புதிய தேர்வு (தேர்வு குறியீட்டெண் 077 – Book Keeping and Accountancy Test) சேர்க்கப்பட்டுள்ளது.**
3. **விண்ணப்பதாரர்கள் துறைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் பொழுது தங்கள் Employee Number (IFHRMS) -யும் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**
4. விண்ணப்பதாரர்கள் கால அட்டவணையில் உள்ள எத்தனை தேர்வுகளையும் எழுதுவதற்கு விண்ணப்பிக்கலாம். ஒரு விண்ணப்பதாரர் ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வுகளை எழுத விண்ணப்பித்திருந்து அதற்காக இவ்வலுவலகத்திலிருந்து அத்தேர்வுகளுக்குரிய தேர்வு நுழைவுச்சீட்டு பெறப்பட்டிருந்தாலும், தனது விருப்பப்படி அத்தேர்வுகளில் ஏதாவது ஒரு தேர்வை மட்டுமே எழுதுவதற்கு அவர் அனுமதிக்கப்படுவார்.

5. விண்ணப்பங்கள் தேர்வாணைய இணையதளம் www.tnpsc.gov.in / www.tnpscexams.in மூலமாக மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.

6. **விண்ணப்பிக்கும் போது கட்டண விவரங்களைப் பதிவு செய்த பின்னர், அதற்கான தகவல் திரையில் வரும் வரை காத்திருக்கவும். இடையில் "Back" அல்லது "Refresh" பொத்தான்களை இயக்காமல் காத்திருக்க வேண்டும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும். இல்லையெனில் பணப்பரிமாற்றம் தடைபடும். இரண்டாம் முறையாக பணம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும். இதை தவிர்ப்பதற்காகக் காத்திருக்க வேண்டும். விண்ணப்பதாரர் பிற்காலத் தேவைக்காக விண்ணப்ப நகலினை பதிவிறக்கம் செய்து வைத்திருக்கலாம். தேர்வர்கள் தேர்வுக் கட்டணம் செலுத்தும் போது சேவை வழங்க தாமதமாகும் வேளையில் தேர்வுக்கட்டணத்தை ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் செலுத்தியிருப்பின் அத்தேர்வுக்கட்டணம் தேர்வாணையத்தால் திருப்பி வழங்கப்படமாட்டாது. தேர்வர்களின் இச்செயலுக்கு தேர்வாணையம் பொறுப்பேற்காது.**

7. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு தேர்விற்கும் ரூ.200/- தேர்வுக் கட்டணமாகவும், பதிவுக்கட்டணமாக ரூ.30/- ம் சேர்த்து இணையவழி செலுத்தும் முறையில் அதாவது இணையவங்கி / பற்று அட்டை / கடன் அட்டை முறை ஆகியவற்றில் ஏதேனும் ஒரு முறையில் மட்டுமே தேர்வு கட்டணத்தை செலுத்தலாம். <u>பிற வகைகளில் செலுத்தப்படும் கட்டணங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது/ அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தால் கட்டணம் திருப்பித் தரப்படமாட்டது.</u>

8. துறைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் <u>அண்மையில் எடுக்கப்பட்ட</u> (மூன்று மாதங்களுக்கு மிகாமல்) பாஸ்போர்ட் அளவிலான <u>நீலம் அல்லது வெள்ளை நிற பின்புலம் கொண்ட தெளிவான நிழற்படத்தை</u> இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். நிழற்படத்தின் அளவு 30kb - 40kb **மற்றும்** <u>165 x 125 pixels</u> **அளவிலும் மற்றும் கையொப்பம்** 20kb - 30kb **மற்றும்** <u>80 x 125 pixels</u> **அளவிலும் நல்ல தரத்துடன் இருத்தல் வேண்டும். <u>தற்படம் / போலராய்டு நிழற்படங்கள் கொண்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.</u>**

9. **நிழற்படம் மற்றும் கையொப்பத்தினை இணையவழி விண்ணப்பத்தில் அதற்கான இணைப்புகளில் முறையே பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

10. **மேற்காணும் அறிவுரைகளை பின்பற்றாத விண்ணப்பங்கள் செல்லாததாக்கப்படும்.**

11. **மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள், அவர்களின் இயலாமை வகையினை விண்ணப்பத்தில் தவறாமல் குறிப்பிட வேண்டும். மேலும், மாற்றுத் திறனாளி குறித்த ஆதாரத்தினை கட்டாயமாக தேர்வு அறையில் சமர்ப்பிக்க வேண்டும்.**

12. **பார்வைத்திறன் குறைபாடு, இரு கைகளும் பாதிக்கப்பட்ட இயக்க குறைபாடு மற்றும் பெருமூளை வாதம் உடைய மாற்றுத்திறனாளிகள், அறிவிக்கையில் உள்ளவாறு மருத்துவசான்றிதழை சமரப்பிக்க**

வேண்டும். விருப்பத்தின் பேரில், உதவியாளர்கள் அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். உதவியாளர் கோரும் இதர மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள், தேர்வு எழுத இயலாமையினால், உதவியாளர் அமர்த்திக்கொள்ள பரிந்துரைத்து முதன்மை மருத்துவ அலுவலர் / அறுவை சிகிச்சை நிபுணர் / அரசு சுகாதார நிறுவன மருத்துவக் கண்காணிப்பாளரால், வழங்கப்பட்ட சான்றிதழ் (இணைக்கப்பட்ட படிவத்தில்) சமர்ப்பிக்க வேண்டும்.

13. **<u>தேர்வு மையங்கள்</u>**:-

துறைத் தேர்வுகள் கீழ்க்காணும் மையங்களில் நடைபெறும். (மாற்றத்திற்குட்பட்டது) :-

| மையத்தின் பெயர் | குறியீட்டு எண் | மையத்தின் பெயர் | குறியீட்டு எண் | மையத்தின் பெயர் | குறியீட்டு எண் |
|---|---|---|---|---|---|
| அரியலூர் | 030 | மயிலாடுதுறை | 038 | திருவண்ணாமலை | 022 |
| செங்கல்பட்டு | 033 | நாகப்பட்டினம் | 011 | திருவள்ளூர் | 021 |
| சென்னை | 001 | நாகர்கோவில் (கன்னியாகுமரி) | 119 | திருவாரூர் | 023 |
| கோயம்புத்தூர் | 002 | நாமக்கல் | 012 | தூத்துக்குடி | 024 |
| கடலூர் | 003 | பெரம்பலூர் | 014 | திருச்சிராப்பள்ளி | 025 |
| தர்மபுரி | 004 | புதுக்கோட்டை | 015 | திருநெல்வேலி | 026 |
| திண்டுக்கல் | 005 | இராமநாதபும் | 016 | திருப்பத்தூர் | 037 |
| ஈரோடு | 006 | இராணிப்பேட்டை | 035 | திருப்பூர் | 032 |
| கள்ளக்குறிச்சி | 034 | சேலம் | 017 | உதகமண்டலம் | 013 |
| காஞ்சிபுரம் | 007 | சிவகங்கை | 018 | வேலூர் | 027 |
| கரூர் | 009 | தென்காசி | 036 | விழுப்புரம் | 028 |
| கிருஷ்ணகிரி | 031 | தஞ்சாவூர் | 019 | விருதுநகர் | 029 |
| மதுரை | 010 | தேனி | 020 | புதுடில்லி | 175 |

14. **துறைத்தேர்விற்கான விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்/ பாடத்திட்டம்/தேர்வு அமைப்பு முறை/தேர்வின் பெயர்/தேர்வுக் குறியீடு/ தேர்வுகளுக்கான கட்டணம் / துறைத் தேர்வுகள்–டிசம்பர் 2023-க்கான கால அட்டவணை ஆகியவை முறையே பிற்சேர்க்கை I, II, III மற்றும் IV எனும் கீழ்காணும் விவரங்களை தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in / www.tnpscexams.in –ல் காணலாம்.**

| | |
|---|---|
| இணைப்பு-I | துறைத்தேர்வு விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் |
| இணைப்பு-II | பாடத்திட்டம் / தேர்வு அமைப்பு முறை |
| இணைப்பு-III | தேர்வின் பெயர் / தேர்வுக்குறியீடு / தேர்வுகளுக்கான கட்டணம் |
| இணைப்பு-IV | துறைத் தேர்வுகள் – டிசம்பர் 2023-க்கான கால அட்டவணை |

15. **விண்ணப்பதாரர்கள் தங்களின் தனித்துவ விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை குறிப்பிட்டு தேர்வாணைய இணையதளத்தில்**

தங்களது நுழைவுச்சீட்டினை 29.11.2023 முதல் பதிவிறக்கம் (Download) செய்துகொள்ளலாம். தங்களது பணிப்பதிவேட்டில் தேர்ச்சி குறித்து பதியும் பொருட்டு நுழைவுச் சீட்டினை பத்திரப்படுத்த வேண்டும். மாற்று நுழைவுச் சீட்டு குறித்து பெறப்படும் கோரிக்கைகள் கண்டிப்பாக பரிசீலிக்கப்பட மாட்டாது.

16. **விண்ணப்பதாரர்கள் தேர்வு தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக, அதாவது முற்பகல் தேர்விற்கு காலை 8.30 மணிக்கும் மற்றும் பிற்பகல் தேர்விற்கு 1.30 மணிக்கும், தேர்வு மையத்திற்கு வருகை புரிய வேண்டும். எனினும் முற்பகல் தேர்விற்கு காலை 9.00 மணிக்கு பின்னரும் மற்றும் பிற்பகல் தேர்விற்கு 2.00 மணிக்கு பின்னரும் வருகை புரியும் தேர்வர்கள் எவரும் தேர்வுக்கூடத்திற்குள் அனுமதிக்கப்படமட்டார்கள்.**

17. விண்ணப்பதாரர்கள் கொள்குறி வகை மற்றும் விரிவான விடை எழுதும் வகையில் ஒருங்கே அமையப் பெற்ற மேற்படி துறைத்தேர்வுகளில் இரண்டு வகைத் தேர்வுகளிலும், தனித்தனியே, தேர்ச்சி பெற நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்களைக் கட்டாயமாகப் பெற்றால்தான் குறிப்பிடப்பட்ட துறைத்தேர்வில் தேர்ச்சி பெற்றவராக கருதப்படுவர்.

18. தேர்வுகளின் முடிவினைத் தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in / www.tnpscexams.in வாயிலாக அறியலாம்.

19. தேர்ச்சி பெற்றவர்களின் பதிவெண்கள், பெயர், தந்தை பெயர், பிறந்த தேதி மற்றும் முகவரி ஆகியவை அடங்கிய முழுவிவரப்பட்டியல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணையதளத்தில் செய்தி மின் – வெளியீட்டிதழாக வெளியிடப்படும்.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

நாள் : 25.09.2023

தொலைபேசி : 044-25300300/336/337/338/339

இணையதளம் : www.tnpsc.gov.in / www.tnpscexams.in

மின்னஞ்சல் : helpdeskdeptl@gmail.com

Toll Free No : 1800 419 0958

## APPENDIX – I

## Certificate regarding physical limitation in an examinee to write

This is to certify that, I have examined Mr/Ms/Mrs ________________________ __________________(name of the candidate with disability) a person with ________________________________(nature and percentage of disability as mentioned in the certificate of disability), S/O/D/o_________________________ a resident of _________________________________(Village/District/State and to state that He/She as physical limitation which hampers his/her writing capabilities owning to his /her disability.

Due to the above mentioned disability following concession may be given:-

1. Extra ___________hours for writing theory exam.
2. Allocation of a scribe.
3. Over looking spelling mistakes and grammatical errors.
4. Using calculator/assistive devices.
5. _______________________(any other assistive devices or concessions).

*strike out the non applicable.

Signature
(Chief Medical Officer/Civil Surgeon/Medical Superintendent /signature of the notified medical authority of a Government health care institution)

Name & Designation
Name of Government Hospital/Health Care Centre / The notified medical authority

Place:
Date:

Signature / Thumb impression
Of the Differently abled person

(Photo of the Differently Abled person and Stamp to be fixed here)

**Note**
Certificate should be given by a specialist of the relevant stream/disability
(eg, Visual impairment – Opthalmologist, Locomotor disability – Orthopedic specialist/PMR.etc).